# கன்னியாகுமரி மாவட்டம் – நல்லூர் முதல்நிலைப் பேரூராட்சி
# கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டம் 2021 – 2022

**ந.க.எண். 313/2022/அ1,** **நாள்: 20.06.2022**

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டம், நல்லூர் முதல்நிலைப் பேரூராட்சியில் 2021–2022 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் மின்கலன் (Sealed Lead Acid) மூலம் இயங்கும் வாகனம் கொள்முதல் செய்திட தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 12.07.2022–ஆம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை நல்லூர் பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 11.07.2022 ஆம் தேதி திங்கள்கிழமை பிற்பகல் 5.00 மணி வரை அதற்குரிய தொகையை கீழ்க்கண்டுள்ள விவரப்படி நல்லூர் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி (வரி உட்பட) இரசீது பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட இரண்டு உறைகளில் (1.Technial Bid 2.Price Bid) சமர்ப்பிக்க வேண்டும். "Executive Officer, Nalloor Town Panchayat" எனும் பெயரில் SBI ஐரேனிபுரம் வங்கியில் மாற்றத்தக்க வகையில் வங்கி வரைவோலை எடுத்து இணைத்து ஒப்பந்த புள்ளிகள் வழங்கவேண்டும்.

12.07.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் தொழில்நுட்ப உறை (Technial Bid) திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதியின் அடிப்படையில் ஒப்பந்த புள்ளி உறை ( Price Bid) திறக்கப்பட்டு ஒப்பந்தபுள்ளி இறுதி செய்யப்படும்.

| வ. எ ண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.) | முன்வைப்பு தொகை ரூ | ஒப்பந்தப் புள்ளி படிவ கட்டணம் ரூ. | பணி முடிக்க வேண்டி கால அளவு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | மின் கலன் (Sealed Lead Acid) மூலம் இயங்கும் வாகனம் - 11 எண்ணிக்கை கொள்முதல் செய்தல் | 1705000/– GST நீங்கலாக (GST 5%) | 17050/- | 6240/- | 30 நாட்கள் |

### நிபந்தனைகள்

1. ஒப்பந்த புள்ளி வழங்குபவர்கள் இரு உறைகள் (Two Cover System) முறையை தவறாது பின்பற்ற வேண்டும். தவறும் பட்சத்தில் ஒப்பந்த புள்ளிகள் நிராகரிக்கப்படும்.
2. மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்திட அமைக்கப்பட்ட துணைக் குழுவில் மின்கலன் (Sealed Lead Acid) மூலம் இயங்கும் வாகனத்திற்கு விவரக் குறிப்புகளின்படி (Specifications) வாகனங்கள் இருக்க வேண்டும். மேலும் மின்கலன் (Sealed Lead Acid) வாகனத்திற்கு ஒரு வண்டியின் அடிப்படை விலை ஜி.எஸ்.டி (5 சதவிகிதம்) நீங்கலாக ரூ.1.55 இலட்சம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், இந்த விலைக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படவேண்டும்.
3. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 இன் படி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் கொள்முதல் ஆணை வழங்கிய மூன்று தினங்களுக்குள் ரூ.50/– மதிப்புள்ள முத்திரைத் தாளில் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட வேண்டும்.
5. மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தவுடன் செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, துணைக் குழு அனுமதி வழங்கியுள்ள விவரக் குறிப்புகள் (Specifications) மற்றும் விலை விகிதம் (Rate) அடிப்படையில் பரிசீலனை செய்து தகுதிச் சான்றிதழ் அளித்த பின்பே சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய விதிமுறைகளின்படி பட்டியல் தொகை வழங்கப்படும்.
6. உரிய காலத்திற்குள் வாகனங்கள் விநியோகம் செய்ய தவறினால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்படும்.

7. வாகனங்கள் விநியோகம் செய்யப்பட்டு ஓராண்டு காலத்திற்கு வாகனத்தில் ஏற்படும் குறைபாடுகளை சம்மந்தப்பட்ட நிறுவனத்தாரே தனது சொந்த செலவில் சீரமைக்கும் வகையில் நிபந்தனைகள் ஒப்பந்தப் பத்திரத்தில் இடம் பெற வேண்டும்.
8. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது. பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்கு பிறகு கொள்முதல் ஆணை வழங்கப்படும்.
9. கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்களுக்கான பட்டியல் தொகை வழங்கப்படும் போது ஜி.எஸ்.டி. 2% பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும்.
10. அடித்தல், திருத்தல் இன்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் வைப்புத் தொகை இன்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதும் இன்றி தள்ளுபடி செய்யப்படும்.
11. செலுத்தப்படும் வைப்புத் தொகை தணிக்கை முடிந்து, தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும்.
12. மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்ட நிறுவனங்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்கலாம்.
13. மேற்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் https://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவிறக்கம் செய்தும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கலாம்.
14. இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுலர்
நல்லூர் முதல்நிலை பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்

**பெறுநர்**

1. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்
2. அலுவலக அறிவிப்பு பலகைக்கு.

**<u>நகல்</u> :–**

1. அலுவலக விளம்பர பலகை.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியாகுமரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.
3. உதவி இயக்குநர், நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகள் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.
4. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் கன்னியாகுமரி மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
5. உதவி பொறியாளர், உண்ணாமலைக்கடை பேரூராட்சி.
6. சம்பந்தப்பட்ட கோப்பு.